**பலபிட்டிய பிரதேச சபை**

**காலி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 டிசெம்பர் 16 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பலபிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து சபைக்குக் கிடைத்த நீர் பவுசரினதும் ஒரு உருளையினதும் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுக்கும் ஊழியர் பிணைப்பும் பெறுமதிக்குமிடையே ரூபா 99,000 வேறுபாடு நிலவியது.

(இ) மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பங்களிப்பாகிய ரூபா 6,713,286 கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 45,276,967 கூட்டுத் தொகையுடைய 07 கணக்கீட்டு விடயங்களது மீதியும் அவற்றுடனொத்த உபபதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுக்குமிடையே ரூபா 1,839,723 கூட்டுத்தொகையுடைய வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

முத்திரைக் கட்டண நிலுவையாகிய ரூபா 2,278,029 கூட்டுத்தொகை, உத்தியோகத்தர்கள் வசமிருந்த ரூபா 3,556 மற்றும் 33 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 692,325 கூட்டுத்தொகையுடைய கடை வாடகை போன்ற மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டிலும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

### 1.3.4 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பதவியணிக்கான படியாகக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 73,515 கூட்டுத்தொகையுடைய முத்திரைக் கட்டண மீதி மற்றும் ரூபா 1,821,965 கூட்டுத்தொகையுடைய வருவாயைக் குறிக்கும் வைப்பு மீதி என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 148,757,990 கூட்டுத்தொகையுடைய காணியும் கட்டிங்களும், இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும், மோட்டார் வாகனங்களும் கைவண்டிகளும், தளபாடங்களும் பொருத்திகளும் மற்றம் நூலகப் புத்தகங்கள் தொடர்பான நாளதுவரையாக்கப்பட்டு வகுப்பு வாரியாகத் தயார் செய்யப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடும் பட்டோலையும், ரூபா 7,585,059 பெறுமதியுடைய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதியாகிய ரூபா 14,847,985 சம்பந்தமான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள், காலப் பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள், ஊழியர் கடனாகிய ரூபா 5,910,900 திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பாகிய ரூபா 10,987,599 மற்றும் நானாவித கடன்பட்டோர் மீதியாகிய ரூபா

7,585,059 என்பவற்றிற்றான காலப்பகுப்பாய்வும் பட்டோலைகளும் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் பரிசீலிக்க முடியவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,801,386 கூட்டுத் தொகையுடைய 79 வைப்பு மீதிகள் தொடர்பாக இலங்கை குடியரசின் 570 மற்றும் 571(1)(2) ஆம் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் பெறுபேறுகள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 28,466,919 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 24,014,440 ஆகும். இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 4,452,479 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

**2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருவாய் | வருவாய் உதவித் தொகை | சுய உற்பத்தி வருவாய் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 98,456,086 | 48,249,326 | 50,206,760 | 69,986,166 | 19,779,406 |
| 2014 | 81,192,076 | 30,771,592 | 50,420,484 | 57,177,635 | 6,757,151 |
| 2013 | 68,668,076 | 27,092,822 | 41,575,254 | 45,735,600 | 4,160,346 |

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவருஞ் செலவினம் ரூபா 12,811,531 அதிகரித்திருந்தமை தென்பட்டதுடன், மீண்டுவரும் வருவாயில் 71 சதவீதமான மீண்டுவரும் செலவினம் நிலவுவதால் வருமானத்துடன் ஒப்பிடப்படுகையில் செலவினம் நிலவுவதால் வருமானத்துடன் ஒப்பிடப்படுகையில் செலவினம் அதிகரித்த மட்டத்தில் இருந்தது.

(ii) ஒவ்வொரு ஆண்டிலும் சபையின் வருவாய்க்கான உதவியைப் பெறுவதில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுவதுடன், முன்னைய ஆண்டை விட மீளாய்வாண்டில் சுயஉற்பத்தி வருவாயில் ரூபா 213,724 நலிவு ஏற்பட்டிருந்தது.

(iii) சபையின் மீண்டுவரும் செலவினம் தொடர்ந்து அதிகரித்தவாறிருந்தும் அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகச் சபை கவனம் செலுத்தவில்லை.

(iv) சபையின் சுயஉற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டும் செலவின அதிகரிப்பு ஒவ்வொரு ஆண்டிலும் அதிகரித்தவாறு இருந்தமை தென்பட்டது.

(v) வருவாய்களை உதவி கிடைக்காது போனால் சபையின் வருவாய் மூலம் மீண்டுவரும் செலவினத்தை எவ்விதத்திலும் முடியாது எனத் தென்பட்டது.

(vi) மேற்படி (i) முதல் (v) வரையிலான பந்திகளில் காணப்படும் விடயங்களுக்கமைய வருவாளை அதிகரித்துக் கொள்வதற்குச் சபை கவனம் செலுத்தவேண்டுமெனவும் அதன் பொருட்டு முறையான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாது போயின் நிதி முகாமைத்தவம் நலிவடைந்து சர்ச்சைக்குரிய நிலை தோன்றக்கூடும் என்பதும் கணக்காய்வின் அபிப்பிராயமாகும்.

(ஆ) நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் மீளாய்வாண்டினது மீண்டுவரும் வருவாயையும் செலவினத்தையும் ஒப்பிடுகையில் 05 நிகழ்ச்சித் திட்டங்களில் நான்கினது வருவாயிலும் கூடிய செலவினம் தென்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தின் படி மதிப்பிடப்பட்ட மூலதன வருவாய் ரூபா 50,285,000 மூலதனச் செலவினம் ரூபா 76,582,000 ஆகும். எனினும், மூலதன வருவாயிலும் கூடிய மூலதனச் செலவினம் எவ்வாறு ஈடுசெய்யப்படும் என்பதற்கான விளக்கமளிக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டினது உள்ளவாறான மூலதன வருவாய் ரூபா 3,498,771 ஆகும். எவ்வாறாயினும், உள்ளவாறான மூலதனச் செலவினம் ரூபா 16,857,653 ஆகியமையால் மூலதனவருவாயிலும் கூடிய ரூபா 13,358,882 மூலதனச் செலவினம் அவதானிக்கப்பட்டது.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டிலும் முன்னைய 2 ஆண்டுகளிலும் நடைமுறை விகிதம் மற்றும் துரித விகிதம் என்பன திருப்திகரமாக அமையவில்லை. வங்கி நடைமுறைக் கணக்கில் இருந்த மேலதிகத் தொகையை முதலிடு செய்து வருவாயை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் சபை கவனம் செலுத்தவில்லை.

## 2.4 வருவாய் நிர்வாகம்

-------------------------------------------

### 2.4.1 தீர்வையும் வரியும்

---------------------------------

மீளாய்வாண்டினது ஆரம்ப நிலுவையான ரூபா 12,102,657 விலைப் பட்டியல் வழங்கப்பட்ட தொகையான ரூபா 4,334,773 என்பவற்றில் 30 சதவீதத்தை மாத்திரமே ஆண்டின்போது அறவிட்டிருந்தமையால், ஆண்டின் இறுதியில் தீர்வையும் வரியும் ரூபா 11,446,255 நிலுவையுடன் அமைந்தது. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.4.2 குத்தகை வாடகை

--------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பித்திருந்த ரூபா 1,055,809 நிலுவையிலும் பட்டியலிடப்பட்ட ரூபா 1,568,818 தொகையில் 56 சதவீதமும் மாத்திரம் ஆண்டின்போது அறவிடப்பட்டமையால் ஆண்டின் இறுதியில் குத்தகை வாடகை மீதி ரூபா 1,147,907 வரையான அதிக பெறுமதியைக் கொண்டிருந்தது.

### 2.4.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டினது ஆரம்ப நிலுவையான ரூபா 12,102,657 விலைப் பட்டியல் வழங்கப்பட்ட தொகையான ரூபா 4,334,773 என்பவற்றில் 30 சதவீதத்தை மாத்திரமே ஆண்டின்போது அறவிட்டிருந்தமையால், ஆண்டின் இறுதியில் தீர்வையும் வரியும் ரூபா 11,446,255 நிலுவையுடன் அமைந்தது. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.4.4 நீதி மன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42,530,026 முத்திரைக் கட்டணமாகவும் ரூபா 1,505,123 நீதிமன்றத் தண்டப்பணமாகவும் பெறப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஊழியர் பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 02 பதவிகளில் 08 வெற்றிடங்களும் அங்கீகரிக்க்பபடாத பதவிகளில் 06 மேலதிகமும் நிலவின. எவ்வாறாயினும், மேலதிகப் பதவியணியை முறைப்படுத்தவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மீளாய்வாண்டு முடிவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ரூபா 5,910,901 ஆகவிருந்த ஊழியர் கடன் மீதியில் ஓய்வு பெற்ற சேவையிலிருந்து விலகிய, மரணமடைந்த உத்தியோகத்தர்கள் ரூபா 42,351 கடன் மீதியும் உள்ளடங்கியிருந்தது. எனினும், அம் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்காதவாறு சபை புத்தாண்டு விழாவிற்கென ரூபா 125,000 மற்றும் 2014 ஆம் ஆண்டில் ஊழியர்களது கல்விச் சுற்றுலா தொடர்பாக ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்கு ரூபா 300,000 எனச் சபையில் நிதியிலிருந்து வழங்கியிருந்தது.

## 3.3 அமுலாகாத செயற்திட்டங்கள்

அஹுங்கல்ல பயானத்தில் வெளியேறும் புகையால் அதற்கு அருகில் உள்ள குடியிருப்பாளருக்கு ஏற்படும் வசதியின்மையைத் தவிர்ப்பதற்கு மயானத்தின் உயரத்தை 20 அடி உயர்த்துவதற்கான செயற்திட்டத்திற்கு ரூபா 1,086,285 நிதி மதிப்பீடு செய்யப்பட்டு திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு முடிவிலும் அச் செயற்திட்டம் அமுலாகவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

## 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 05 செலவின விடய வரம்புகளில் ரூபா 11,828,560 அதிகரிப்பும், மேலும் 02 செலவின விடயங்களது வரம்பிலும் கூடுதலாக ரூபா 1,188,385 கூட்டுத் தொகையும், 06 வருவாய் விடங்களில் வருவாய் எய்தப் பெறாத ரூபா 18,222,269 கூட்டுத்தொகையும் ஒரு வருவாய் விடயத்தின் இலக்கிடப்பட்ட வருவாயிலும் கூடிய ரூபா 8,547,354 தொகையும் ஏற்பட்டமையால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளூராட்சி ஆணையாளரின் (தென் மாகாணம்) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபா/யஹ/01/ந.வ/லே இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு இடமட பெறவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

---

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டு முடிவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்து முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

---

2004 முதல் சபையின் வளாகத்தில் பயனற்று இருக்கும் 03 வாகனங்களைப் பழுதுபார்த்துப் பயன்படுத்துவதற்கோ அல்லது 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்துதல்**

---

(i) சபை பயன்படுத்தும் 06 வாகனங்களது உரித்தைச் சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டு முடிவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை பயன்படுத்தும் 07 காணிகளதும் கட்டிடங்களதும் உரித்தை உறுதி செய்வதற்கான உரித்துறுதி அல்லது ஒப்படைப்புக் கட்டளை சபையிடம் இருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்